1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது கையிலே உள்ள இருப்பைச் செலவு செய்ய வேண்டிய நிலை. ஆகவே இந்த நிதி வளருவதற்கு வழியில்லை.

*539 வினா—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா : சிக்கலில் இருந்து சிக்கப்பத்து, ஒரத்தூர், அகர ஒரத்தூர், கலசம்பாடி, ஆய்மழை, தன்னிலப்பாடி, ஒட்டத்தட்டை வழியாக சோழ வித்தியாபுரம் செல்லும் சாலையை சீர்செய்ய ரயில்வே செஸ் நிதியிலிருந்து ரூபாய் 1·2 இலட்சம் அனுமதிக்கப்பட்டும், வேலைகள் ஆரம்பிக்காமலிருக்கக் காரணமென்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்த வேலையை எடுத்துக்கொள்ள பொதுமக்களிடமிருந்தும் ஊராட்சி தலைவர்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் வந்தன. ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் குழு ஏற்பட்ட பிறகு மேல் நடவடிக்கை எடுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்வி கேட்டதே இந்த முக்கியமான பிரச்சினை வரும் என்பதினாலேதான். இது முக்கியமான ரோடு. பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபனை வரவில்லை. அதிகாரிகளும் பிளான் போட்டு எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டார்கள். பஞ்சாயத்து, ஒன்றியத் தலைவர்களும் முன்பிருந்த தலைவர்கள்—பெருவாரியான பஞ்சாயத்துத் தலைவர்கள் அதிகாரிகள் போட்ட திட்டத்தின்படி, ஆரம்பிக்க வேண்டும் என்று எழுத்து மூலம் அனுமதித்து விட்டார்கள். ஆனால் அந்த யூனியன் சேர்மன், எக்ஸ் சேர்மன், தன்னுடைய ஊரிலே இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று தனக்கு இருக்கிற 'வீட்டோ' பவர் மூலம், மெஜாரிட்டி பஞ்சாயத்துத் தலைவர்களும் ஓ.கே. கொடுத்துவிட்டபிறகு இது தடைபட்டிருக்கிறது என்ற தகவல் அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சித் தலைவர்களும் ஒத்துக்கொள்ளவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. ஆனால் 66 விழுக்காடு தலைவர்களுடைய ஒப்புதல் பெற்றால், இந்த வேலையை ஆரம்பித்துவிடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தீர்மானம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த இரண்டாவது கேள்வி நான் போடுவதற்குக் காரணம், அதற்கு எல்லா ஊராட்சித் தலைவர்களும் சம்மதிக்கவில்லை, மெஜாரிட்டி ஊராட்சித் தலைவர்கள சம்மதித்தால் அந்த வேலையை துவங்கலாம் என்று சொல்லி அங்கேயிருந்து ரிப்போட் வந்துள்ளது உண்மையை மறைக்கக்கூடிய முறையில் இருக்கிறது என்று கருதுகிறேன். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, அரசாங்கம் நிதி ஒதுக்கி, திட்டம் போட்டு, பிறகு, பஞ்சாயத்துத் தலைவர்களை கன்சல்ட் செய்கிறபோது ஏகமனதாக ஒப்புதல் இருக்க வேண்டும், அப்போது தான் வேலையை ஆரம்பிக்கலாம், ஒருவர் எதிர்த்தால்கூட நிறுத்தி வைக்க வேண்டும் என்று சொல்லி அரசாங்கத்திலிருந்து ஏதேனும் உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி ஒன்றும் உத்தரவு அனுப்பப்படவில்லை. அதனால் தான் 66 சதவீதம் ஊராட்சித் தலைவர்கள் சம்மதித்தால் அந்த வேலையைத் துவக்கலாம் என்று முடிவுக்கு வந்து இருக்கிறார்கள்.

நகராட்சிகள் திரையரங்குகள் நடத்தல்.

* 540. வின—திரு. துரை கலியமூர்த்தி

திரு. என். கிட்டப்பா

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளுக்கு சினிமா தியேட்டர் கட்ட லைசென்ஸ் கொடுக்கப்படுமா ? அரசு மானியத் தொகை வழங்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) நகராட்சி மன்றங்களே சினிமா தியேட்டர்களை கட்டி நடத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நகராட்சிகளில் இவ்விதம் நடைபெறுகிறது ?

(ஈ) எந்தெந்த நகராட்சிகள் அரசுக்கு இவ்வித கோரிக்கை விடுத்துள்ளன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம். தேவைப்படும்போது லைசென்ஸ் கொடுக்கப்படும். மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை.